உ

கடவுள் துணை.

கண்ணாடிச்சிந்து

சென்னை - புரசை

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது சென்னை பெரம்பூர் பாறக்ஸ் போஸ்டைச்சார்ந்த பெருமாள்பேட்டை வல்லம்பங்காருசெட்டி வீதி 25-வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சுந்தரவிலாசஅச்சுக்கூடத்தில் அநேகவித தமிழ்புத்தகங்களும், நூதனமாக அச்சிட்ட புத்தகங்களும், அற்புதமானமருந்துவகைகளும், லப்பர் முத்திரை சீல்களும், றப்பர் எழுத்துகளும் உண்டு. விபரமாக அததின்விலை முதலானதும் தெரிந்துக்கொள்ளவேண்டுமானால் ஒருகடிதம் எழுதி ½ - அணா டபால் முத்திரை அதில் வைத்து தங்கள் விலாசம் தெரிவித்தால் ஒரு அணா பெறும்படியான கேட்லாக் புத்தகம் 2-அனுப்பப்படும் பார்வையிட்டு தேவையான சாமான்களுக்குஎழுதலாம்.

முன்பணம் அனுப்பாமலேவால்யுபேபில் போஸ்ட்டில் தாங்கள் எழுதும்சாமான்கள் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பூ. சு. துளசிங்கமுதலியார்,
சுந்தரவிலாசம் பிரஸ்,
பிரம்பூர் பாறக்ஸ் போஸ்ட், மெட்ராஸ்.

உ

வேலுமயிலுந்துணை.

கண்ணாட்டிச்சிந்து.

வெண்பா.

விண்ணாடரேத்தரிய வேலவன்மேல் வையமிசை
கண்ணாட்டிச் சிந்தாகக் கழறுதற்குத் - தண்ணாருஞ்
சோலைதிகழுந்தணிகை சுந்தரவிநாயகன்பொற்
றாளை வணங்கிச் சாற்றுவாம்.

நூன்முகம்.

சிந்து.

இந்துதவழ் சுந்தரனார் தந்தவொய்யாரன்
கண்ணாட்டி - தந்தவொய்யாரன்
செந்தணிகை வாழ்செங்கல்வ ராயகெம்பீரன்
கண்ணாட்டி - ராயகெம்பீரன். (க)

பச்சைமயி லேறிவரு முச்சிதவேலன்
கண்ணாட்டி - உச்சிதவேலன்
இச்சையுடன் போற்றுபவர்க் கீந்திடுஞ்சீலன்
கண்ணாட்டி - யீந்திடுஞ்சீலன். (உ)

கானக்குற வள்ளிமகிழ் கடம்பணிதோளன்
கண்ணாட்டி - கடம்பணிதோளன்
வானவரிடர் தவிர்த்தே வயங்குந்தயாளன்
கண்ணாட்டி - வயங்குந்தயாளன். (௩)

தெய்வகுஞ்சரிமகிழுஞ் செங்கதிர்வேலன்
கண்ணாட்டி - செங்கதிர்வேலன்
சைவமறையோனெனவுஞ் சாற்றுஞ்சுசீலன்
கண்ணாட்டி - சாற்றுஞ்சுசீலன். (௪)

ஒன்னலர்புரமெரித்தோ னுதவியபாலன்
கண்ணாட்டி - யுதவியபாலன்
தன்னிகரில்லாதகொடுந் தானவர்காலன்
கண்ணாட்டி - தானவர்காலன். (௫)

ஆணிப்பொன்னே ரத்தினமே ஆசைக்கிளியே
கண்ணாட்டி - ஆசைக்கிளியே
மாணிக்கமே மாங்குயிலே வார்த்தையைக்கேளடி
கண்ணாட்டி - வார்த்தையைக்கேளடி. (௬)

சித்தர் முத்தர் பத்தர்பணி சேவற்கொடியோன்
கண்ணாட்டி - சேவற்கொடியோன்
வெத்திமயி லேறியேநம் வினைகள் தீர்ப்பவன்
கண்ணாட்டி - வினைகள் தீர்ப்பவன். (௭)

ரஞ்சிதஞ்சே ரஞ்சுகமே நங்கையேமானே
கண்ணாட்டி - நங்கையேமானே
கொஞ்சுங்கிளி யாளேநாமுங் கூடியேபோவோம்
கண்ணாட்டி கூடியேபோவோம் (௮)

ரத்தினபு லாக்குகம்மல் முகத்தில்மின்னுதே
கண்ணாட்டி - முகத்தில்மின்னுதே
முத்துமாலை மோகனமுங் கழுத்திற்றுன்னுதே
கண்ணாட்டி - கழுத்திற்றுன்னுதே (௯)

தங்கத்தினில் கல்லிழைத்த வங்கிதோடாவாம்
கண்ணாட்டி - வங்கிதோடாவாம்
சங்கையில்லா மல்கரத்தில் தகதகென்னுதே
கண்ணாட்டி - தகதகென்னுதே (௰)

பத்தரைமாற்று தங்கத்தால் கைவளையல்களாம்
கண்ணாட்டி - கைவளையல்களாம்
சித்திர விசித்திரமொளிர் செம்பொன்மோதிரம்
கண்ணாட்டி - செம்பொன்மோதிரம் (௰௧)

கல்லிழைத்த வொட்டியாண மிடையில்மின்னுதே
கண்ணாட்டி - யிடையில்மின்னுதே
பல்லொளிகள் முத்தைப்போலே பளபளென்குதே
கண்ணாட்டி - பளபளென்குதே (௰௨)

பாதமிரண்டில் சதங்கை கீதம்பாடுதே
கண்ணாட்டி - கீதம்பாடுதே
சீதமதி முகத்தைக் கண்டென் சித்தம்வாடுதே
கண்ணாட்டி - சித்தம்வாடுதே (௰௩)

சந்திரகாந்த சரிகைச்சேலை தளதளென்குதே
கண்ணாட்டி - தளதளென்குதே
சுந்தர வடிவழகி சிந்தைசோருதே
கண்ணாட்டி - சிந்தைசோருதே (௰௪)

நெத்தியில் திலர்தபொட்டு நிகநிகென்னுதே
கண்ணாட்டி - நிகநிகென்னுதே
குத்தினி ரவிக்கையது மெத்தஜொலிக்குதே
கண்ணாட்டி - மெத்தஜொலிக்குதே (௰௫)

மல்லிகை முல்லைமுடிக்கு மாங்குயிலாளே
கண்ணாட்டி - மாங்குயிலாளே
வல்லியேநம் வல்வினைகள் தீர்ந்திடும்பாராய்
கண்ணாட்டி - தீர்ந்திடும்பாராய் (௰௬)

சதுர்மறை புகலுமிந்த சரவணப்பொய்கை
கண்ணாட்டி - சரவணப்பொய்கை
விதியின்படி யேயதினில் மூழ்குவோம்வாராய்
கண்ணாட்டி - மூழ்குவோம்வாராய் (௰௭)

வேலவனைச் சேவைசெய்ய வினைகள்தீருமே
கண்ணாட்டி - வினைகள்தீருமே
பாலசுப்ரமணியதேவன் பதங்கள்வாய்க்குமே
கண்ணாட்டி - பதங்கள்வாய்க்குமே (௰அ)

அணியணியா யிருக்குமன்ன சத்திரம்பாராய்
கண்ணாட்டி - சத்திரம்பாராய்
பணிமணிகள் விற்குமிந்த பக்குவம்பாராய்
கண்ணாட்டி - பக்குவம்பாராய் (௰கூ)

வேதியர்கள் வேள்விசெய்யுஞ் சாலைகள்பாராய்
கண்ணாட்டி - சாலைகள்பாராய்
சீதமலர் பூத்தொளிருஞ் சோலைகள்பாராய்
கண்ணாட்டி - சோலைகள்பாராய் (உ௰)

ஆறுமுகன் பவனிவரும் அற்புதம்பாராய்
கண்ணாட்டி - யற்புதம்பாராய்
வீறுசேர் முரசதிரும் விந்தையைத்தேராய்
கண்ணாட்டி - விந்தையைத்தேராய் (உக)

அடியவர்கள் கூட்டமதை யன்னமேபாராய்
கண்ணாட்டி - யன்னமேபாராய்
வடிவழகி கடைகளிதோ வயங்குதுசீராய்
கண்ணாட்டி - வயங்குதுசீராய் (உஉ

மனதின்படி வேணதெல்லாம் வாங்குவோம்வாராய்
கண்ணாட்டி - வாங்குவோம்வாராய்
கனமுலவுங்கருங்குயிலே கவலையேன் கூறாய்
கண்ணாட்டி - கவலையேன்கூறாய் (உ௩)

கார்த்திகையின் பெருமையதை கருதப்போகுமோபா
கண்ணாட்டி - கருதப்போகுமோ [ராய்
நாற்றிசையோர் போற்றிசெய்யும்நன்கதைப்பாராய்
கண்ணாட்டி - நன்கதைப்பாராய் (உ௪)

அன்பர்கள் துதித்திரங்கும் ஆனந்தம்பாராய்
கண்ணாட்டி - ஆனந்தம்பாராய்
இன்பயிலேமனைக்கு ஏகுவோம்வாராய்
கண்ணாட்டி - யேகுவோம்வாராய் (உ௫)

பக்தியுடன் கங்காதரன் பாடுந்தமிழ்க்கு
கண்ணாட்டி - பாடுந்தமிழ்க்கு
சித்தமகிழ்ந்தே யருளுஞ் செங்கல்வராயன்
கண்ணாட்டி - செங்கல்வராயன் (உ௬)

மாமலர்ப் பதங்கள்வாழிவண்மறைவாழி
கண்ணாட்டி - வண்மறைவாழி
பூமியிலிதைப்பகரும் புண்ணியர்வாழி
கண்ணாட்டி - புண்ணியர்வாழி. (உ௭)

கண்ணாட்டிச்சிந்து

முற்றிற்று.